வகுப்பு : 12

தேர்வு எண் | | | | | | |

# அலகுத் தேர்வு - 1, ஜுலை - 2024

நேரம் : 1.30 மணி] **தமிழ்** [மொத்த மதிப்பெண்கள் : 45

## பகுதி – அ

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. (பலவுள் தெரிக) 5x1=5

1. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக்கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது
   அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்
2. இலக்கியத்தையும் மொழியையும் ஒரு சேரப்பேசுகின்ற இலக்கண நூல்
   அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்
3. திறனாய்வுக் கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களுள் ஒருவர் --------
   அ) தி.சு நடராசன் ஆ) சிற்பி பாலசுப்பிரமணியம் இ) பாரதியார் ஈ) பாரதிதாசன்
4. யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே ------
   அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை
   இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை
5. "புவி வெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கலே" என்று கூறியவர்
   அ) ஆல்வின் ஆ) டேவிட் கிங் இ) ஆயிஷா ஈ) முத்துக்குமரன்

## பகுதி – ஆ

### பிரிவு– 1

எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க. 3x2=6

6. கவிஞர் சிற்பி எவற்றை வியக்கும் பா தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
7. அணியிலக்கணத்தையும் கூறும் இலக்கண நூல்கள் யாவை?
8. வாகைத் திணை விளக்குக.
9. விடியல், வனப்பு – இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.

### பிரிவு–2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x2=4

10. " படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
    கடாஅ யானைக் கலிமான் பேக" - இச் சங்கக் கவிதையின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும் அவற்றிற்கான இலக்கண குறிப்புகளையும் எடுத்து எழுதுக.
11. மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை. இன்று சந்தித்துக்கொண்டிருக்கிறான் – இரு தொடர்களாக்குக.

. நீவிர் அறிந்த புயல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

### பிரிவு–3

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 7x1=7

இலக்கணக்குறிப்புத் தருக.

வெங்கதிர் (அல்லது) பொய்யா

. பகுபத உறுப்பிலக்கணம் தருக.

வியந்து (அல்லது) கலங்கி

. புணர்ச்சி விதி தருக.

புதுப்பெயல் (அல்லது) செம்பரிதி



Scanned with CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

16. கலைச்சொல் தருக.

SUBSCRIPTION (அல்லது) PLATFORM

17. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

விலை, விளை, விழை

18. உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.

எலியும் பூனையும் போல

19. மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன எவை?

பகுதி – இ

பிரிவு–I

கீழ்க்காணும் சிறுவினாக்களுக்கு விடை தருக. 2x4=8

20. "செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம்" தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.

(அல்லது)

வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

பிரிவு–II

21. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் – விளக்குக.

[அல்லது]

பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்கம் தருக.

பிரிவு–III 1x4=4

22. தமிழாக்கம் தருக

1. A new language is a new life.
2. If you want people to understand you, speak their language.
3. Knowledge of languages is the doorway to wisdom
4. The limits of my language are the limits of my world

பகுதி – ஈ 1x6=6

கீழ்க்காணும் நெடுவினாவிற்கு விடை தருக.

அ) புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்துகிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோரி உங்கள் ஊர் மின்வாரியப் பொறியாளருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

பகுதி – உ

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக. 1x5=5

ஓங்கலிடை ------- எனத் தொடங்கும் பாடலை அடிபிறழாமல் எழுதுக.



www.Padasalai.Net
Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com